DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.262/2025

PW - 10

| | | |
|---|---|---|
| Name | : | சுப்ரமணியம் (Lw - 11) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(**எதிரி ஆஜர் இல்லை **BNSS** பிரிவு **355-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

முதல் விசாரணை **Date : 09.06.2026**

நான் கடைசியாக நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த வருடம் ஜீன் மாதத்தில் பணி ஓய்வு பெற்று தற்போது திருசெங்கோடு எலச்சிபாளையத்தில் வசித்து வருகிறேன்.

கடந்த 04.09.2024ம் தேதி எருமப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சுப்ரமணியன் பணியில் இருந்தபோது நாமக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற விபத்து தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து நிலைய குற்ற எண்.177/2024 BNS பிரிவுகள் 281, 125(a) -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பினார்.

ஒரு நகலை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.09.2024ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பரமேஷ்வரன், ரவிச்சந்திரன்

ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார். பின்னர் சாட்சிகள் செல்வராஜ், முரளிதரன், அங்கமுத்து, செந்தில்குமார், சரவணன், பரமேஷ்வரன், ரவிச்சந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

பின்பு கடந்த 08.10.2024ம் தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 64 L 5942 பதிவெண் கொண்ட வாகனத்தை மோ.வா.ஆய்வாளர்க்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தார். பின்பு கடந்த 05.11.2024ம் தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்தில் சம்மந்தப்பட்ட மற்றெரு வாகனமான TN 88 A 2221 பதிவெண் கொண்ட வாகனத்தை மோ.வா.ஆய்வாளர்க்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தார். 11.10.2024ம் தேதி மாலை 16.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி பழனிசாமியை கைது செய்து தக்க பிணையில் விடுவித்தார். பின்பு பணி மாறுதல் காரணமாக வழக்கின் கோப்புகளை தொடர் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

நான் வழக்கினை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 26.11.2024ம் தேதி இவ்வழக்கில் விபத்துக்கு உள்ளான வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை - 1 திருமதி.உமாமகேஷ்வரி என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கில் வாதி செல்வராஜ் மற்றும் சாட்சி முரளிதரன் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.ஜெயபாரதி என்பவரை விசாரித்து விபத்து தகவல், விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். **(**வாதி செல்வராஜ்ன் விபத்து தகவல்**,** விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ**.**சா**.**ஆ**.8,** அ**.**சா**.**ஆ**.9,** அ**.**சா**.**ஆ**.10** ஆகவும்**,** சாட்சி முரளிதரனின் விபத்து தகவல்**,** விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ**.**சா**.**ஆ**.11,** அ**.**சா**.**ஆ**.12,** அ**.**சா**.**ஆ**.13** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.)** இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது BNS சட்ட பிரிவுகள் 281, 125(a)(2-எண்ணிக்கை) -ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணை செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சுப்ரமணியம் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். ஏற்கனவே போலிசார் விசாரணையில் கூறிய சங்கதிகளை சாட்சிகள் திரும்ப கூறியதால்

மேற்படி வாக்குமூலத்தை தனியாக பதிவு செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் நடந்த தேதியாக 03.09.2024 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்தாக 04.09.2024ம் தேதி 19.00 மணிக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் எதிரியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வாதி செல்வராஜ், சாட்சி முரளிதரன் மற்றும் எதிரி பழனிசாமி ஆகியோருக்கு நாமக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து விபத்து தகவல் வந்தது என்றால் சரிதான். மேற்படி எதிரியை பொறுத்து விபத்து தகவல் கிடைக்கப்பெற்ற நிலையில் அது குறித்து மருத்துவரிடம் விசாரித்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெறவில்லை என்றால் சரிதான். எதிரியை காவல்நிலையத்தில் வைத்து கைது செய்தார்களா அல்லது அவரது வீட்டில் வைத்து கைது செய்தார்களா என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். காவல்நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளார். எதிரியை எப்போது கைது செய்தார் என்றால் கடந்த 11.10.2024ம் தேதி மாலை 16.00 மணிக்கு கைது செய்தார்.

அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் மற்றும் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றில் சம்பவம் நடந்த இடமாக அங்கமுத்து கோழிகடை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அங்கமுத்து கோழிக்கடைக்கு எதிரில் என குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்த இடமானது கணேஷ் தார்ஸ் வீட்டிற்கு முன்புறமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சரிவர புலன் விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**